தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

சித்திரை 5, பிரமோதூத, திருவள்ளுவர் ஆண்டு-2021

1990, ஏப்ரல் *18*, புதன்கிழமை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் முனைவர் மு. தமிழ்க்குடி மகன் அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கங் கடிந்து செயல்.''

மனம் கலங்காமல் ஆராய்ந்து, துணிந்து ஏற்ற தொழிலைச் சோர்வுகொள்ளாமல் காலம் தாழ்த்தாமல் செய்து முடிக்க வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

திறந்தவெளி சிறைச்சாலைகள்.

**3696*—திரு. ச. அழகுவேலு :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சிறைச்சாலைகள் அனைத்தையும் திறந்தவெளி சிறைச் சாலைகளாக மாற்றும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ் ஜே. சாதிக்பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போதுள்ள சிறைச்சாலைகள் அனைத்தையும் திறந்த வெளிச் சிறைச்சாலைகளாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை. அவைகளைத் திறந்தவெளிச் சிறைச்சாலை களாக மாற்றக் கூடிய சாத்தியக் கூறும் இல்லை.

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் களே, வளர்ந்து வரும் நாகரீக உலகில் மனித நாகரீகம் படிப்படி யாக வளர்ச்சியுறுகின்ற இந்தக் காலக் கட்டத்தில் கைதிகளும் மனிதர்கள்தான் என்றஉணர்வோடு சிறைச்சாலையை அறச் சாலை யாக மாற்றிய மணிமேகலை பிறந்த மண்ணில் அரசு படிப்படியாக வாவது இதை நிறைவேற்ற முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மணிமேகலை சிறைச்சாலைக் குப் போய்த்தான் சீர்திருத்தம் செய்தார். சட்ட அமைச்சரும் அங்கே அப்படி இருந்துதான் சீர்திருத்தம் செய்ய வேண்டும்

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வாழ்க்கையைப் பலதடவை பெற்று விட்டேன்; இனிமேலாவது பெறாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்சமயம் கோவை மாவட்டத்தில் சிங்கா நல்லூரில் நூறு சிறைவாசிகளுக்கு உரிய வசதியோடுதான் திறந்த வெளிச் சிறைச்சாலை இயங்கி வருகிறது. தஞ்சாவூர் மாவட்டத்தில் திருமலைசமுத்திரத்தில் அதுபோன்ற ஒரு சிறை அமைக்க ஏற்பாடு நடைபெறுகிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்தை அடிப்படையாகக்கொண்டு அதைப் பரிசீலிக்கலாம்.

திரு. எஸ்.எஸ். தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய மாநிலத்தில் சிறைச்சாலை இல்லாத மாவட்டம் இருக்கிறதா? அப்படி இருந்தால் புதிய சிறைச்சாலைகள் அமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவது புதிதாக அமைக்கப்பட்ட மாவட்டங்கள் பற்றியது என்று கருதுகிறேன். சில மாவட்டங்களில் சென்ட்ரல் ஜெயில் இல்லை என்பது உண்மைதான். அதுபற்றிப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. மு. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தண்டனை அடைந்த எல்லாக் கைதிகளையும் அல்லது ரிமாண்டில் இருக்கிற எல்லாக் கைதிகளையும் திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் அனுமதிப்பதில்லை என்பதும், குறிப்பிட்ட ஓரளவு பக்குவப்பட்ட சிலரை மட்டுமே சில விதிமுறைகளுக்கு உட்பட்ட நிலையில் சிறைச்சாலைகளில் அதாவது திறந்தவெளிச் சிறைச்சாலைகளில் வைத்து இருக்கிறோம் என்பதும், அப்படி வடிகட்டி அனுப்பியும் மேற்கண்ட திறந்தவெளிச் சிறைச்சாலைகளிலிருந்து சிலர் தப்பி ஓடிவிட்டனர் என்பதும் உண்மையா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு உறுப்பினர் தமக்குத் தெரிந்த உண்மைகளை எல்லாம் இங்கே சொல்லி இருக்கிறார். அது உண்மைதான்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீபத்தில் நடைபெறுகின்ற எண்ணற்ற அரசியல் போராட்டங்களில் கலந்து கொள்ளும்படியான தண்டிக்கப்படுகின்ற கைதிகளை அரசியல் கைதிகளாக நடத்துவதற்கு திறந்தவெளிச் சிறைச்சாலையைப் பயன்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1990 ஏப்ரல் 18]

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: மாண்புமிகு தலைவர் அவர்களே, திறந்தவெளிச் சிறைச்சாலை என்று சொன்னால் அங்கே வசதிகள் குறைவாக இருக்கும். சீர்திருத்தங்கள் செய்ய வாய்ப்பு இருப்பதாக நான் கருதவில்லை. அதுபோன்ற கருத்துரு இப்போது இல்லை.

திரு. எம். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திறந்தவெளிச் சிறைச்சாலை தஞ்சாவூரிலே இருந்தது. அது மிகச் சிறப்பாக இருந்தது. அங்கே காய்கறித் தோட்டங்கள் போட்டு, மாமரங்கள் வைத்து, தென்னை மரங்கள் வைத்து வளர்க்கப்பட்டு, சிறைச்சாலைக்கும், அரசாங்கத்துக்கும் பயன் தரும் வகையில் அது இருந்தது. ஆகவே எல்லா மாவட்டங்களிலும் அந்தமாதிரிச் செயல்படுத்த முன்வந்தால் அதனால் அரசுக்கு மிக்க வருவாய் கூட இருக்கும் என்பதையும் கருத்திலே கொண்டு அமைச்சர் அவர்கள் அதனைப் பரிசீலனை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

9–05 மணி

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஏற்கனவே திறந்தவெளிச் சிறைச்சாலை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு வேண்டுமென்று கேட்டு, கொடுத்து விட்டார்கள். இந்த அரசு, 11 லட்சம் ரூபாய் அனுமதித்து, அந்தத் திறந்தவெளிச் சிறைச்சாலையை நடத்த ஏற்பாடு செய்து, அது நடைபெற்றுக் கொண்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப் போல, வருகின்ற வருமானம் பூராவும் அரசாங்கத்திற்கு வருமோ அல்லது வேறு எங்காவது போகுமோ என்பதை என்னால் சொல்ல முடியாது.

திரு. சம்சுதீன் என்கிற கதிரவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண சிறைச்சாலைக்கும், இந்த திறந்தவெளிச் சிறைச்சாலைக்கும் உள்ள வித்தியாசங்கள் என்ன? திறந்தவெளிச்சிறைச்சாலைக்கு புதிதாகக் கைது செய்யப்படுகின்ற கைதிகள் அனுப்பப்படுகிறார்களா அல்லது இப்போது நடைமுறையிலே இருக்கின்ற சிறைச்சாலைகளிலுள்ள கைதிகள் தகுதிகளைக் கண்டறிந்து அந்தத் திறந்தவெளிச் சிறைச்சாலைக்கு மாற்றப்படுகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ்.ஜே. சாதிக் பாட்சா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமநாதன் அவர்கள் விளக்கமாகச் சொன்னார்கள். பக்குவப்படுத்தப்பட்ட, குறிப்பிட்ட சில கைதிகள் தான் அந்த சிறைச்சாலைக்கு அனுப்பப்படுகிறார்கள். திறந்த வெளிச் சிறைச்சாலை என்று சொன்னால், அங்கே விவசாயம் செய்யலாம். வசதியாகக் காரியம் நடைபெறக்கூடிய இடமாகவும் அது இருக்கிறது. எனவே தான், குறிப்பிட்ட, தகுதியுள்ள நம்பிக்கைக்குரிய கைதிகளை அங்கே அனுப்புகிறோம்.